71ம் ஆண்டு கொண்டாடும் பவானிசாகர் அணை

சத்தியமங்கலம், ஆக.19: ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்தில் பவானிசாகர் அணை அமைந்துள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்றபின் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு தலைமையிலான ஒன்றிய அரசு முதலாம் ஐந்தாண்டு திட்டத்தில் அணைகள் கட்டுவதற்கு முக்கியத்துவம் அளித்தது.

இத்திட்டத்தில், பவானிசாகர் அணை கட்ட ஒப்புதல் அளித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 1948ம் ஆண்டு பவானி ஆறும், மோயாறும் கலக்கும் இடத்தில் ரூ.10.50 கோடி செலவில் கட்டுமான பணி தொடங்கப்பட்டது. தொடர்ந்து 7 ஆண்டுகள் நடைபெற்ற கட்டுமான பணி 1955ம் ஆண்டு ஆகஸ்ட் 19ம் தேதி நிறைவு பெற்றது.

அன்றைய தினம் அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சர் காமராஜர், அணையை நாட்டுக்கு அர்ப்பணித்தார். தமிழகத்தில் தஞ்சை டெல்டா பாசனத்திற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய பாசனப்பரப்பு கொண்டது பவானிசாகர் அணை. இந்த அணையின் மூலம் கீழ்பவானி பிரதான வாய்க்காலில் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இது தவிர, பவானி ஆற்றுப்பாசனத்தில் தடப்பள்ளி வாய்க்கால் மூலம் 17 ஆயிரத்து 654 ஏக்கர் நிலங்களும், அரக்கன் கோட்டை வாய்க்கால் மூலம் 6 ஆயிரத்து 850 ஏக்கர் நிலங்களும், காலிங்கராயன் வாய்க்கால் மூலம் 17 ஆயிரத்து 776 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன.

அணையின் மொத்த உயரம் 120 அடி ஆகும். இதில், சேறு கழித்து 105 அடி வரை நீர் தேக்கி வைப்பதால் 105 அடி என கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த அணையின் கட்டுமான பணி நடைபெற்ற போது 1953ல் அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேருவும், சென்னை மாகாண முதல்வர் ராஜாஜியும் கட்டுமான பணியை நேரில் பார்வையிட்டுள்ளனர்.

1950ல் மிக உயரிய தொழில்நுட்பமுள்ள இயந்திரங்களை அணை கட்டுமான பணிக்கு பயன்படுத்தியுள்ளனர். இதற்கு தேவையான இயந்திரங்கள் லண்டனிலிருந்து வரவழைக்கப்பட்டது என அணை கட்டுமான பணிக்கு சென்ற இப்பகுதியை சேர்ந்த பெரியவர்கள் கூறுகின்றனர்.

இந்த அணை கட்டப்பட்டதால் தரிசு நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறின. லட்சக்கணக்கான விவசாயிகள், விவசாய கூலித்தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. நகரங்கள் முதல் கிராமங்கள் வரை குடிநீர் வழங்க ஏதுவானது. நாடு போற்றும் இந்த அணை இன்றுடன் 70 ஆண்டுகளை கடந்து 71ம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

பவானிசாகர் அணை கட்டி முடிக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் இதுவரை 32 முறை அணை நீர்மட்டம் 100 அடியை எட்டியுள்ளது. 23 முறை 102 அடியை தொட்டுள்ளது. 5 முறை அணை தனது முழு கொள்ளளவான 105 அடியை எட்டியுள்ளது. இதில், கடந்த 2018ம் ஆண்டு முதல் 2022 வரை தொடர்ச்சியாக 5 ஆண்டுகளும் அணை நீர்மட்டம் 102 அடியை எட்டியது குறிப்பிடத்தக்கது. கடந்த 2019 மற்றும் 2020ம் ஆண்டுகளில் அணை முழு கொள்ளளவான 105 அடியை தொட்டது சிறப்பாகும்.

இதுவரை 32 முறை நீர்மட்டம் 100 அடியை தொட்டது

5 முறை முழு கொள்ளளவான 105 அடி எட்டியது

▶ பவானிசாகர் அணையின் அழகிய தோற்றம்.

▶ அணை கட்டுமான பணியை ஆய்வு செய்த அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு.

வெள்ள அபாய எச்சரிக்கை

நீலகிரி மலைப் பகுதியில் பரவலாக பெய்த மழையால் பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 101.71 அடியாக இருந்தது. விரைவில் 102 அடி எட்டும் நிலையில் உள்ளதால் 5 ஆயிரம் கனஅடி முதல் 10 ஆயிரம் கனஅடி வரை உபரிநீர் பவானி ஆற்றில் திறக்கப்படலாம் என்பதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலவை அடைய மூன்றாவது ஏவுதளம்

இஸ்ரோ தலைவர் தகவல்

காரைக்குடி, ஆக. 19: எதிர்காலத்தில் நிலவை அடையும் திட்டங்களுக்காக மூன்றாவது ஏவுதளம் அமைக்க ஒப்புதல் பெற்றுள்ளோம் என இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் 36வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. விழாவில், இஸ்ரோ தலைவர் நாராயணன் பேசியதாவது:

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்று பாதுகாப்பாக பூமிக்கு திரும்பி வரலாற்று சாதனையை படைத்துள்ளார். இது நாட்டின் விண்வெளி திட்டமான ககன்யானுக்கு முக்கிய படிக்கல்லாக அமையும். ஸ்பேஸ் டாக்கிங் எக்ஸ்பெரிமென்ட் மிஷன் மற்றும் 100வது ஜிஎஸ்எல்வி ஏவுதல் போன்ற பல்வேறு சாதனைகளை இந்தாண்டு தொடக்கத்தில் இருந்து நிகழ்த்தியுள்ளோம்.

எதிர்காலத்தில் நிலவை அடையும் திட்டங்களுக்காக மூன்றாவது ஏவுதளம் அமைக்க ஒப்புதல் பெற்றுள்ளோம். இது இந்திய விண்வெளி ஆராய்ச்சியில் முக்கியமான முன்னேற்றம். இந்தியா அனைத்து துறைகளிலும் அபார முன்னேற்றம் அடைந்துள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளோம். சுகாதாரத்துறையில் முன்னேறி சராசரி ஆயுட்காலம் 32 வயதில் இருந்து 72 ஆக உயர்ந்துள்ளது. 8.4 லட்சம் பள்ளிகள், 742 மருத்துவக் கல்லூரிகள், 4,351 பொறியியல் கல்லூரிகள் மாணவர்களுக்கு பயிற்சி அளித்து நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகிறது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.135.13 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இந்தியா 2031க்குள் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக வளரும்.

இவ்வாறு கூறினார்.

குடி மராமத்து திட்டத்தில்

அதிமுக ஆட்சியில் முறைகேடு சிபிஐ விசாரிக்கக் கோரி மனு

லஞ்ச ஒழிப்புத்துறையில் மனு அளிக்க உத்தரவு

மதுரை, ஆக. 19: நீர்நிலை பராமரிப்பு பணி முறைகேடு குறித்து சிபிஐ விசாரணை கோரிய வழக்கில், லஞ்ச ஒழிப்புத்துறையில் மனு அளிக்குமாறு ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடியைச் சேர்ந்த பொன்காந்திமதி நாதன், ஐகோர்ட் மதுரை கிளையில் கடந்த 2020ல் தாக்கல் செய்த மனு:

தமிழ்நாட்டில் நீர்நிலைகளை பராமரித்து பாதுகாப்பதற்காக கடந்த அதிமுக ஆட்சியில் குடிமராமத்து திட்டம் கொண்டு வரப்பட்டது. இதற்காக அன்றைய ஆட்சியில், 4 ஆண்டுகளுக்கு ரூ.928.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நீர்நிலைகளில் களிமண், சவடுமண் ஆகியவற்றை எடுப்பதை முறைப்படுத்த அரசாணை 50 வெளியிடப்பட்டது.

பொதுவாக குடிமராமத்து பணிகள் அந்தந்த பகுதி விவசாயிகள், நீரினை பயன்படுத்துவோர் சங்கம் மூலமாகவே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் 2014ம் ஆண்டிற்குப் பிறகு நீரினை பயன்படுத்துவோர் சங்க தேர்தல் நடத்தப்படாததால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 7 பேரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு குடிமராமத்து பணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால், அந்த நபர்கள் அரசியல்வாதிகளோடு தொடர்புகொண்டு முறைகேடு செய்பவர்களாகவே உள்ளனர்.

ஒரே நீர்நிலையை குடிமராமத்து திட்டம், தாய் திட்டம் மற்றும் அரசாணை எண் 50 ஆகிய மூன்று திட்டங்களின் கீழும் பராமரிப்பதாகக் கூறி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்த நீர்நிலை முறையாக தூர் வாரப்படுவதில்லை. எனவே, இதனை சரிசெய்ய நீரினை பயன்படுத்துவோர் சங்க தேர்தலை விரைவாக நடத்துமாறும், தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் குடிமராமத்து திட்டம், தாய் திட்டம், அரசாணை எண் 50 ஆகியவற்றின் கீழ் நடைபெற்ற நீர்நிலைகள் பராமரிப்பு பணிகள், முறைகேடுகள் குறித்து சிபிஐ விசாரணை நடத்துமாறும் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், அருள்முருகன் ஆகியோர் முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அரசுத் தரப்பில், "மனுதாரர் தனது மனுவில் நிதி முறைகேடு மற்றும் நிதி மோசடி தொடர்பாக ஏராளமான புகார்களை கூறியுள்ளார். இதுதொடர்பாக லஞ்சஒழிப்புத்துறையிடமோ அல்லது சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களிடமோ புகார் மனு அளிக்காமல், நேரடியாக நீதிமன்றத்தில் பொதுவாக நிவாரணம் கோருவது ஏற்கத்தக்கதல்ல" என கூறப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், மனுதாரர் புகார் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மனு அளிக்கலாம் எனக் கூறி மனுவை முடித்து வைத்தனர்.

யாருடன் கூட்டணி? பொறுத்திருந்து பாருங்கள்

ஓபிஎஸ் சஸ்பென்ஸ்

அவனியாபுரம், ஆக. 19: தேர்தலில் யாருடன் கூட்டணி என்ற கேள்விக்கு, 'பொறுத்திருந்து பாருங்கள்' என ஓ.பன்னீர்செல்வம் பதிலளித்தார்.

சென்னை செல்வதற்காக நேற்று மதுரை விமான நிலையம் வந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், செய்தியாளர்களிடம் கூறியதாவது, "சி.பி.ராதாகிருஷ்ணன் அனைத்து மக்களிடமும் அன்பாகவும், பண்பாகவும் பழகக்கூடியவர். அவரை துணை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்திருப்பதை வரவேற்கிறேன்" என்றார்.

"மீண்டும் பாஜ கூட்டணியில் இணைவீர்களா அல்லது யாருடன் கூட்டணி அமைப்பீர்கள்" என்ற கேள்விக்கு, "பொறுத்திருந்து பாருங்கள்" என பதில் அளித்தார், "முன்னாள் அமைச்சர் ஆர்பி.உதயகுமார் தங்களை அண்ணன் என்று கூறியுள்ளாரே" என கேட்டதற்கு, "நான் அண்ணன் என்றால் அவர் எனக்கு தம்பி" என, சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

"அடுத்த முறை பிரதமர் தமிழகம் வரும்போது உங்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்படும் என கூறப்படுவது" குறித்த கேள்விக்கு, "அதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்ற ஓபிஎஸ், "விஜய்யுடன் கூட்டணி சேர்வீர்களா" என கேட்டபோது, "அவருடனான கூட்டணி தொடர்பாக, இதுவரை யாரும் என்னை தொடர்பு கொள்ளவில்லை" என்றார்.

இந்திய கம்யூ. நிர்வாகிகள் தேர்வு தள்ளிவைப்பு

சேலம், ஆக.19: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாடு கடந்த 15ம் தேதி சேலத்தில் தொடங்கியது. கடைசி நாளான நேற்று செம்படை பேரணி நடந்தது. சேலம் பிரபாத் பகுதியில் இருந்து புறப்பட்ட பேரணி, நேருகலையரங்கம் வழியாக போஸ் மைதானத்தை வந்தடைந்தது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். பின்னர் பொதுக்கூட்டம் நடந்தது.

இம்மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதில் மாநில குழு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் மாநில நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஒருவாரத்திற்கு தள்ளி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

காளான்கள் போல அதிகரித்து வருகிறது

மனமகிழ் மன்றங்களுக்கு உரிமம் வழங்குவதில் புதிய விதிமுறைகள்

ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, ஆக. 19: மனமகிழ் மன்றங்கள் காளான்கள் போல அதிகரித்து வருவதாக கூறியுள்ள ஐகோர்ட் கிளை, உரிமம் வழங்குவதில் புதிய விதிமுறைகளை வகுக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த செல்வகுமார், சிவப்பிரகாசம் உள்ளிட்டோர் ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த பொதுநல மனுவில், "தனியார் மது கடைகளுக்கு மனமகிழ் மன்றங்கள் எனும் பெயரில் அனுமதி வழங்கப்படுகிறது.

இவ்வாறு பதிவு செய்து மனமகிழ் மன்றத்தில் மது விற்பனை என்பது அந்த சங்கத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மட்டுமே மது விற்க முடியும். ஆனால் எப்எல் 2 உரிமம் பெற்ற மனமகிழ் மன்றங்கள் சட்ட விரோதமாக உறுப்பினர் அல்லாதோருக்கும் மது அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. விதிகளை மீறி செயல்பட்டு வரும் மனமகிழ் மன்றங்களின் உரிமத்தை ரத்து செய்யுமாறு உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தனர்.

இந்த மனுக்கள் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், அருள்முருகன் ஆகியோர் முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், "மனமகிழ் மன்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க பதிவுத்துறை தலைவருக்கு அதிகாரம் இல்லை" என தெரிவிக்கப்பட்டது. அப்போது நீதிபதிகள், "விதிகளை மீறி செயல்படும் மனமகிழ் மன்றங்கள் மீது யார் நடவடிக்கை எடுப்பது" என்றனர். இதற்கு அரசு தரப்பில், "விளையாட்டுக்கள், புத்தகம் வாசிப்பது போன்ற பொழுதுபோக்கு விஷயங்கள் மனமகிழ் மன்றங்களில் நடத்தப்படுகின்றன. அப்போது மதுவை உட்கொள்வது தனிநபரின் விருப்பம் சார்ந்தது" என கூறப்பட்டது.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

மனமகிழ் மன்றங்களில் மது விற்பனையானால், அது குறித்து விதிகளில் இருக்க வேண்டும். அதை பொதுமக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். தமிழகத்தில் மனமகிழ் மன்றங்கள் காளான்கள் போல அதிகரித்து வருகின்றன. இங்கு உறுப்பினர் அல்லாதோருக்கும் மது விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கும் மனமகிழ் மன்றங்கள் அமைந்துள்ள இடத்தில் இருப்பவர்களுக்கும் பெரும் சிரமம் ஏற்படுகிறது. இது அரசியலமைப்பு வழங்கும் உரிமைகளுக்கு எதிரானது. தமிழ்நாடு கூட்டுறவு சங்க பதிவு விதிகளை மீறும் மனமகிழ் மன்றங்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் காவல் துறையும், பதிவு துறையும் இணைந்து செயல்பட வேண்டும். உறுப்பினர்களுக்கு மட்டுமே மது விற்பனை செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்பினர் அல்லாதவருக்கு விற்பனை செய்தால் உரிமம் ரத்து செய்யப்பட வேண்டும். மனமகிழ் மன்றம் எனும் பெயரில் மது விற்பனை செய்யலாமா என்பது தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் எதுவும் இல்லை. ஆகவே, பதிவுத்துறை தலைவர் மனமகிழ் மன்றங்கள், எப்எல் 2 உரிமத்திற்காக விண்ணப்பிக்கும் போது அதனை தெளிவாக சங்க விதிகளில் குறிப்பிட அறிவுறுத்த வேண்டும். அதன் அடிப்படையில் உரிய விதிமுறைகளும் வகுக்கப்பட வேண்டும். விதிகள் தெளிவாக இல்லை எனில் மதுவிலக்கு துறை தரப்பில் எப்எல் 2 உரிமம் மனமகிழ் மன்றங்களுக்கு வழக்கப்படக்கூடாது.

இவ்வாறு உத்தரவிட்டனர்.

மணல் அள்ளுவதில் ஏற்பட்ட தகராறில் ஜேசிபி உரிமையாளர் வெட்டி கொலை

வேதாரண்யம், ஆக. 19: நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோவில்தாவு கிராமத்தை சேர்ந்தவர் குமார் (35). ஜேசிபி உரிமையாளரான இவர், மணல் விற்பனை செய்து வந்தார். இவருக்கும் கைலவணம்பேட்டையை சேர்ந்த இமானுவேல் (30) என்பவருக்கும், மணல் அள்ளி விற்பதில் முன்விரோத தகராறு இருந்து வந்தது.

இதனால் குமாரை வீடு அருகே வரவழைத்து மண் வெட்டியால் வெட்டி நேற்று முன்தினம் இரவு கொலை செய்துள்ளார். நேற்று காலை அவ்வழியாக சென்ற பொதுமக்கள் தகவலின்படி வேதாரண்யம் போலீசார் சென்று விசாரணை நடத்தி, இமானுவேலை கைது செய்தனர்.

Tamil Nadu Power Distribution Corporation Ltd.
7th Floor, NPKRR Maaligai, 144, Anna Salai, Chennai - 600 002
(Accounts Branch)

Notice Inviting Tender

Online bids are invited from SEBI Registered 'Category - I' Merchant Bankers for appointment as Arranger for mobilization of funds through issuance of Government Guaranteed Bonds on Private placement basis to the tune of Rs.10,000 Crore. EMD is Rs. 5,00,000/-. The bids will be received through e-tender upto 5:00 p.m. on 10.09.2025. The portal for downloading of bid documents and online bid submission is **https://tntenders.gov.in/nicgep/app.**

DIPR/4446/Tender/2025 **Chief Financial Controller / General**

भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA

INVITING BIDS

For sale of Land & Buildings (Erstwhile Holiday Home of RBI) at Lonavala

RBI invites bids for sale of its NA land & buildings located at Bhushi Village, Lonavala, Taluka Maval, District Pune.

Property Details: Plot Size: 3,832.36 sq m. with 3 Bungalows having road access located in a Gated Community.

Property sale agent: M/s. Cushman & Wakefield, Mumbai. (Contact- Vikas K. Harjai: +91 7506650333 vikas.harjai@cushwake.com)

For bidding details, please visit link https://rbi.org.in/Scripts/BS_ViewTenders.aspx

RBI reserves the right to accept or reject any or all bids without assigning any reasons and no correspondence will be entertained in this regard.

தெற்கு இரயில்வே

சென்னை கோட்டம் பணிகள் கிளை

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.34/2025 தேதி. 14.08.2025

வ. எண்.	அயிட்டம் எண்.	பணி பற்றிய விவரம்
1	MAS34OF25193S	PEI பலாஸ்ட் டெப்போவில் 50 மிமீ அளவு இயந்திரத்தால் உடைக்கப்பட்ட ஸ்டோன் பலாஸ்ட் சேகரித்தல் மற்றும் சப்ளை செய்தல் (பல்வேறு இருப்புப்பாதை பணிகளுக்காக BKH வேகன்களில் ஏற்றுதல் மற்றும் இறக்குதல் உட்பட)
2	MAS34OF25194S	முதுநிலை பிரிவு பொறியாளர் / நிரந்தர வழி / TMV, ACK & CGL பிரிவுகளில் அத்து மீறல் மற்றும் கால்நடைகள் நடமாட்டத்தைத் தடுக்க ஏதுவாக பாதுகாப்பு வேலி (43.53கிமீ) அமைத்தல்

குறிப்பு: சென்னை தலைமையகத்தில் உள்ள மண் இயந்திரவியல் ஆய்வகத்தில் பரிசோதனைக்காக, பலாஸ்ட் மாதிரிகள், ஒப்பந்தப்புள்ளி திறப்பு தேதிக்கு ஏழு வேலை நாட்களுக்கு முன்பாக, பரிசோதனைக்குரிய குறிப்பிட்ட கட்டணத்துடன் கூடியதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதியும் நேரமும்: 08–09–2025 அன்று 11.30 மணி

முழுமையான விவரங்களையும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தையும் **http://www.ireps.gov.in** இணையத்தளத்தில் காணலாம்.

கோட்ட இரயில்வே மேலாளர் / பணிகள் / சென்னை - 03

சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 501, சால்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புது டெல்லி-110025
CIN:U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெடின் பின்வரும் கடன்தாரர்களுக்கு தெரிவிக்கப்படுவது என்னவென்றால், அவர்களால் வங்கியிலிருந்து பெறப்பட்ட தங்க கடன்/கள் தொடர்பாக இதுவரை அவர்களுக்கு பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அதிலும் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டபோதிலும் அவர்கள் கடன் தொகையை திருப்பித் தரவில்லை. அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன்மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், வங்கியில் கடனீடாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கடன் பெறப்பட்ட வங்கிக் கிளையில் காலை 11:00 மணிக்கு ஏலம் விடப்படுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்கள், கணக்கை வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெரிய அளவில் இந்த ஏலத்தில் பங்கெடுக்க முடியும்.

ஏலத் தேதி 28.08.2025 @ காலை 11:00 மணி

வ.எண்	கிளை	கணக்கு எண்.	கணக்கு வைத்திருப்பவர் பெயர்
1	சென்னை	104142512362	மூர்த்தி M V
2	சென்னை	104142512138	லக்ஷ்மணன் R
3	சென்னை	104142512225	வனிதா பார்த்திபன்
4	சென்னை	104142512277	சுதா S
5	சென்னை	104142512320	R முருகன்
6	சென்னை	104142512351	R பரணி
7	சென்னை	104142512383	K விக்னேஷ்

எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் இந்த ஏலத்திலிருந்து எந்த கணக்கையும் நீக்கவோ அல்லது ஏலத்தை ரத்து செய்யவோ வங்கி உரிமையைப் பெற்றிருக்கிறது.

அதிகாரப்பூர்வ அதிகாரி, சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

விருத்தாசலம் நகராட்சி
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (இரண்டு உறைகள் முறை)
ந.க.எண்:3850/2024/இ1 நாள்: 14.08.2025

வ. எண்	பணியின் பெயர்	ஒப்பந்த தொகை (ரூ. இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை (ரூ.) (வங்கி வரைவோலையாக மட்டும்)	ஒப்பந்ததாரர் நிலை	பணி முடிக்கப்பட வேண்டிய காலம்
நகர்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2024-25					
1.	விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 04 நாச்சியார்பேட்டை பகுதியில் அறிவுசார் மையம் கட்டும் பணி	192.00	192000	தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்	360 நாட்கள்

1. விருத்தாசலம் நகராட்சியில் இணையதளம் (ONLINE) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
2. விருத்தாசலம் நகராட்சியில் நடைபெற உள்ளஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறைகள் முறையில் வரவேற்கப்படுகின்றன
3. ஒப்பந்தப்புள்ளி தமுனாவினை http://tntenders.gov.in என்ற இணைய தள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம்செய்து எடுத்துக்கொள்ளலாம். அல்லது அலுவலகத்தில் நேரடியாக தொகை செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்
   அ. ஒப்பந்தப்புள்ளி முன்கலந்தாய்வுக்கூட்டம் - 25.08.2025 காலை 11.00 மணி
   ஆ. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்தல் - 19.08.2025 காலை 11.00 மணி முதல்
   இ. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்பித்தல் (Online) - 04.09.2025 மாலை 3.00 மணி வரை
5. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் மற்றும் அதே இடத்தில் வருகை புரிந்த ஒப்பந்ததாரர் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
6. இதர விவரங்கள் வேண்டுவோர் பொறியியல் பிரிவில் வேலை நேரத்தில், வேலை நாளில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செ.எ.தொ.இ.4451/ஒப்பந்தப்புள்ளி/2025 **ஆணையாளர், விருத்தாசலம் நகராட்சி**

டி.சி தர மறுத்ததால் ஆத்திரம்

அரசு கல்லூரியில் புகுந்து பேராசிரியர் மீது தாக்குதல்

மாணவர் கைது

கோவில்பட்டி, ஆக. 19: தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி கிருஷ்ணா நகரில் இயங்கி வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை தலைவரான பேராசிரியை சந்தனமாரி பொறுப்பு முதல்வராக இருந்து வருகிறார். கல்லூரியில் மண்ணியல் துறையில் பயின்று இடையில் நின்ற கூசாலிபட்டியை சேர்ந்த மனோஜ் என்ற மாணவர், நேற்று கல்லூரிக்கு வந்து மாற்றுச் சான்றிதழ் தருமாறு பேராசிரியை சந்தனமாரியிடம் கேட்டுள்ளார். அவர், கல்லூரிக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை உள்ளதால் டிசியை தர மறுத்ததாக தெரிகிறது. இதனால் ஆத்திரமடைந்த மனோஜ், ஒருமையில் பேசியதாகக் கூறப்படுகிறது. அப்போது அங்கு நின்றிருந்த உடற்கல்வி பிரிவு கவுரவ பேராசிரியர் பூபதி ராஜன், மனோஜை கண்டித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மனோஜ் அவரை தாக்கினாராம். இதில் காயமடைந்த அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். மாணவர் மனோஜை பிடித்து கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதுதொடர்பாக வழக்குப் பதிந்த போலீசார், மனோஜை கைது செய்தனர்.

தொண்டையில் மிட்டாய் சிக்கி திணறிய சிறுவன்

காப்பாற்றிய ஆர்பிஎப் போலீசுக்கு பாராட்டு

மேட்டுப்பாளையம், ஆக. 19: மேட்டுப்பாளையத்தில் இருந்து கோவை செல்லும் பயணிகள் ரயிலில் நேற்று மதியம் பயணம் செய்த செல்வலட்சுமியின் (32), 2 வயது மகன் தேவ் ஆதிரன் வாயில் வைத்திருந்த மிட்டாயை திடீரென விழுங்கியுள்ளான். மிட்டாய் தொண்டையில் சிக்கியதால் சிறுவனுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டுள்ளது. 'ரயில்வே பாதுகாப்பு படை போலீஸ் இன்ஸ்பெக்டர் சுனில் குமார், ஏஎஸ்ஐ சஜினி ஆகியோர் சிறுவனை தூக்கி குப்புற படுக்க வைத்து முதுகில் தட்டி முதலுதவி சிகிச்சை அளித்துள்ளனர். இதில் மிட்டாய் வெளியே வந்தது. போலீசாரின் இந்த சமயோசித புத்தியால் சிறுவன் காப்பாற்றப்பட்டதை பயணிகள் பாராட்டினர்.

pnb Housing Finance Limited

பதிவு அலுவலகம்: 9 ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடல்லி-110001, தொலைபேசி: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com
கிளை அலுவலகம்: டோலி ஆர்கேட், எண்.2-4-651 & 2-4-652, முதல் தளம், நாகோல் எஸ் சாலை, ஹைதராபாத்-500035.

நானாது தேதிய திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) உடன், பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 இன் அத்தியாயம் III இன் பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு

நாங்கள், பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனிமேல் 'பிஎன்பிஎச்எஃப்எல்' ஆக குறிப்பிடப்படும்) பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் அத்தியாயம் III இன் பிரிவு 13(2) கீழ் டோலி ஆர்கேட், எண்.2-4-651 & 2-4-652, முதல் தளம், நாகோல் எஸ் சாலை, ஹைதராபாத்-500035 உப்பல் அலுவலகம் மூலமாக கோரிக்கை அறிவிப்பு வழங்கியிருந்தோம். எங்கள் அதிகாரப்பூர்வ அதிகாரி மூலம் மேற்கூறிய கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டது. தவணைகள்